Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (13-10-65) இதழ் 243

விசுவாவசு புரட்டாதி 27 ஐ: ஆகிர் பிறை 17 புதன்கிழமை




## 251 தடவை மீறினராம்

புதுடில்லி, அக். 12

கடந்தசெப்டம்பர் மாதம் 23-ந் திகதி யுத்த நிறுத்தம் ஏற்பட்டபின்பு. 251 முறை யுத்த நிறுத்தத்தை மீறியிருப்பதாய் டில்லியில் அறிவிக்கப்பட்டது.

இழந்த நிலைகளை மீட்கவும், இழந்த கௌரவத்தைக் காக்கவுமே இத்தகைய அத்துமீறல்கள் நடைபெறுவதாய் டில்லி அதிகாரிகள் கூறினர்.

# புரட்சித் தலைவர் உன்டுங் பிடிபட்டார்

## மத்திய ஜாவாவில் பல இடங்களில் சண்டை

### சுமத்ராவில் கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக்காரர்கள் விளக்கப்பட்டனர்

ஜாகர்த்தா, அக். 12

இந்தோனேஷியாவில் அதிபர் சுகர்ணோவுக்கு எதிராகப் புரட்சி நடத்திய, புரட்சித் தலைவர் லெப்டினண்ட் கேர்ணல் உன்டுங் கைதுசெய்யப்பட்டதாக ஜாகர்த்தா வானொலி அறிவித்தது. வெளியேற முயன்றபோது, மத்திய ஜாவாவின் வடக்குக் கரையில் அவர் பிடிக்கப்பட்டார்.

மற்ருேர் புரட்சித் தலைவரான கர்னல் லத்தீபும், மற்றும் சில புரட்சித் தலைவர்களும் பிடிக்கப்பட்டார்கள். கைதாவதை எதிர்த்த கர்னல் லத்தீப் காயமடைந்தாரென அறிவிக்கப்படுகிறது.

தலைநகர் ஜாகர்த்தாவில் ஊரடங்கு உத்தரவு ஓரளவு தளர்த்தப்பட்டபோதிலும், ராணுவச்சட்டம் தொடர்ந்து இருப்பதாயும் வீடுவீடாக நுழைந்து ஆயுதங்கள் தேடப்படுவதாயும் அறிவிக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் சார்பான ஆதிக்கத்திலிருந்த அண்டாரா செய்தி ஸ்தாபனம், இப்போது கம்யூனிஸ்ட்டல்லாத ஒருவரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மத்திய ஜாவாவில் நிலைமை மேலும் நெருக்கடிக்குள்ளாகியிருப்பதாகவும் பல இடங்களில் சண்டை நடைபெற்று வருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

சுமத்ராவில் கம்யூனிஸ்டுகள் குழுமிவருகிருர்கள் என்றும், அவர்களைத் துருப்புகள் சூழ்ந்துகொண்டுவருவதாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது. சுமத்ராவில் பல நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாய் மெடாங் ரேடியோ அறிவித்தது,

ஜாகர்த்தாவில் நேற்று நடைபெற்றமிகப் பிரமாண்டமான ஒரு பொதுக்கூட்டத்தில் கம்யூனிஸ்ட் புரட்சிக்காரர்களுக்கு மரணதண்டனை விதிக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

இதற்கிடையில் இந்தோனேஷியா உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாம் என வெளிநாடுகளுக்கு ஜாகர்த்தா எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

### சைப்ரஸ்

நிக்கோஸியா, அக். 12

சைப்ரஸ் துருக்கர்களுக்கு ஓரளவு சுதந்திரம் வழங்கவும், அடிப்படை உரிமைகள் வழங்கவும் தயாராய் இருப்பதாக ஐ.நா. வுக்கு சைப்ரஸ் தெரிவித்திருக்கிறது.

## கொலைமுயற்சி வழக்கு

### சம்பந்தப்பட்ட இடத்திற்கு கோர்ட்டார் விஜயம்

யாழ்ப்பாணம், புதன்

இளவாலை கொலை முயற்சி வழக்கில், சம்பவம் நடந்த இடத்தை நேற்றுக்காலை நீதியரசர், வழக்கறிஞர்கள் ஜூரி சபையினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

சம்பவம் நடந்த இடத்திலிருந்துகோர்ட்டார்திரும்பி வந்ததும் விசாரணை ஆரம்பமானது.

வடபகுதி அஸைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் 2-வது தினமாக நடைபெற்ற விசாரணையில் காயமடைந்தவரின் மனைவியாகிய லூசிரத்தினத்தை எதிரியின் வழகறிஞர் குறுக்கு விசாரணை செய்தார்.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி இளவாலையில் ரி. விஜரத்தினம் என்பவரை, துரைரத்தினம் என்பவர் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

எதிரி சார்பில் வழக்கறிஞர் ரி. கணேசலிங்கம், திருவாளர்கள் ஆர். ஜே செல்வரத்தினம், தளையசிங்கம் யோகநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

மேல் விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

## "நான் பார்த்தபோது மதிலால் ஏறிக் குதித்து ஓடினுர்"

### கூழாவடிக் கொலைவழக்கில் அடுத்தவீட்டுப் பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

கூழாவடி கொலை வழக்கில் நேற்று சாட்சியமளித்த மூன்று சாட்சிகளை எதிரியாகிய கதிரவேலு காளிமுத்து குறுக்கு விசாரணை செய்தார்.

யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் கோட்டில் நீதிபதி திரு. ரி. ஜே. இராஜரத்தினம் முன்னிலையில் இவ்வழக்கு நேற்றுக்காலை மீண்டும் விசாரணை செய்யப்பட்டது,

டாக்டர் வேலாயுதம சிவகுருநாதர் சாட்சியமளித்தபோது கூறியதாவது:—

சம்பவம் நடந்தினம் காலையில் நான் யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய்க்குச் சென்றுகொண் டிருந்தேன். ஆனைக்கோட்டையில் சிலர் எனது காரைமறித்தார்கள். காயக்காரரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லவேண்டுமென்று அவர்கள் கூறினுர்கள். காயமடைந்தவர் இரத்தக் காயங்களுடன் இருந்தார். உடன் சிகிச்சை அளிப்பதற்காக காரில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன். பொலிசாருக்கு அறிவித்துவிட்டு, காரில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளையும் கூட்டிச் சென்றேன்.

குறுக்கு விசாரணை செய்யப்போகிறீரா என்று நீதிபதி எதிரியைப் பார்த்துக் கேட்டபோது இல்லையென்று பதிலளித்தார்.

திரசா வில்பிரெட் சாட்சியமளித்தபோது கூறியதாவது:—

தேவராசன் வீட்டிற்குப் பின்பக்கத்தில் எனது வீடு இருக்கிறது. சம்பவம் நடந்ததினம் காலை 11 மணிக்கு தேவராசன் வீட்டிலிருந்து 'ஐயோ ஐயோ' என்ற சத்தம் கேட்டது. நான் மதிலால்எட்டிப்பார்த்தபோது, வெள்ளை சேட் அணிந்தஒருவர் மதிலால் ஏறிக் குதித்து ருேட்டில் ஓடுவதைக் கண்டேன். 4-ம் தேதி நடை

(6-ம் பக்கம் பார்க்க)

## தார்மீக இயக்கம்மூலம் உலக சமாதானத்தை நிலைநாட்டலாம்

### இலங்கை, ஜப்பான் பிரதமர்கள் செய்தி

டோக்கியோ, அக். 12

தார்மீக ஒழுக்க இயக்கத்தின் மூன்ருவது உலக மகாநாடு ஒடவாராவில் ஆரம்பமானபோது இலங்கைப் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவின் ஆசிச் செய்தி ஒன்று வாசிக்கப்பட்டது.

இருபத்தைந்து தேசங்களிலிருந்து வந்த 850 பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

ஜப்பானிய பிரதமர், கொரியாப் பிரதமர் ஆகியோர் அனுப்பிவைத்த ஆசிச்செய்திகளும் மகாநாட்டில் வாசிக்கப்பட்டன.

இலங்கைப் பிரதமர் தனது செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது: இந்த இயக்கத்தில் நான் பெரிதும் அக்கறை கொண்டுள்ளேன். உலகசமாதானத்திற்கும் முன்னேற்றத்திற்கும் இந்த இயக்கம் பெரிதும் பயன்படும் என நான் எண்ணுகின்றேன். உண்மையான அடிப்படையில் இந்த இயக்கம் செயலாற்றுமாகில் உலகிலே ஸ்திரமான ஒரு நிலையையும் கொள்கையையும் ஏற்படுத்தமுடியுமென்பதில் சந்தேகமில்லை.

ஜப்பானிய பிரதமர் தனது செய்தியில் தெரிவித்திருப்பதாவது: நான் இந்த இயக்கத்தை பெரிதும் பாராட்டுகின்றேன். கடந்த காலத்தில் தார்மீக ஒழுக்க இயக்கத்தினர் நோக்கங்களை நிறைவேற்றுவதில் மிகவும் பிரதான பங்கெடுத்துக்கொண்டனர். இன்று மனிதசமூகம் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. இதற்கு பதில் கொடுக்கக்கூடியது இந்த இயக்கம்தான். இந்த அடிப்படையில்தான் நாம் ஆசியாவிலும் உலகத்திலும் சமாதானத்தை நிலைநாட்ட முடியும்.

## மன்னூர் பகுதியில் மந்திரி முகம்மது சுற்றுலா

### தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க கோரிக்கை

பேசாலை, செவ்வாய்

தேசீய அரசாங்கம் சாதி, மத பேதமின்றி சகல மக்களுக்கும் உழைக்க உறுதி பூண்டிடுக்கிறதெனத் தொழில் மந்திரி திரு. முகம்மது இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசியபோது குறிப்பிட்டார்.

சகல மக்களின் முன்னேற்றத்திற்கு சாத்தியமான பணிபுரியும், பிரத மந்திரிக்குச் சகலரும் ஆதரவளிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

எவருக்கும் பாரபட்சமின்றி சமநோக்குடன் தேசீய அரசாங்கம் செயல் புரிந்துவருவது பற்றி அவர் விளக்கினுர்.

மந்திரி முகம்மதுவுக்கு நேற்று தலைமன்னூர் ரயில் நிலையத்தில் மிகக்குதூகலமான வரவேற்பளிக்கப்பட்டது.

எருக்கலம்பிட்டி முஸ்லிம் சாடசாலையிலும் மந்திரி உரைநிகழ்த்திஞர். மன்னூர் எம். பி. திரு. [illegible] அழக்கோனும் [illegible] உரைநிகழ்த்திஞர்.

## கடத்தல் முயற்சி கண்டுபிடிக்கப்பட்டது

சென்னை, அக். 12

இலங்கையிலிருந்து கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாகக் கருதப்படும் ஒரு வள்ளத்தில் தூத்துக்குடி சுங்கப் பகுதியினர் 36 சாதிக்காய் மூடைகளையும் இரண்டு [illegible] களையும் கண்டுபிடித்து பறிமுதல் செய்துள்ளனர்.

தகவல் கிடைத்ததன் பேரில் சுங்கப் பகுதியினர் ஒரு வள்ளத்தில் சென்று கள்ளக்கடத்தலில் ஈடுபட்ட வள்ளத்தைத் தடுத்ததையடுத்து அதிலிருந்தவர்கள் நீந்திச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பொருட்களுடன் 60,000 ரூபா விலைமதிக்கப்பட்ட வள்ளமும் பின்னர் கரைக்குக் கொண்டுவரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

விதி என்பதென்ன? நாம் ஏற்கனவே செய்த வினைகளின் பயனேயாகும். ஆகவே அந்த விதியை இப்போதைய புதிய முயற்சிகள் மூலம் சுலபமாக வென்றுவிட முடியும்.

—சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதிமீ 27 உ (13-10-65)

## பெரிய வெட்கக்கேடு

"உற்றுழியுதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாதுகற்றல் நன்றே" என்பது தமிழ்ப்பழம் பாடல் ஒன்று. உயர்தரக் கல்வி கற்பதற்காக கொழும்புக்குச் சென்றுள்ள நமது மாணவ மாணவிகள் படும் பாடு பெரும்பாடாகஉள்ளது. கஷ்டப்பட்டுக் கல்வி கற்பது நல்லதேயெனினும் சூழ்நிலை காரணமாகஅவர்கள் உடலுக்கும் உள்ளத்துக்கும் தீங்கு ஏற்பட்டு, அவர்கள் வாழ்க்கைக்கு ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடாதென்பதே நமது கவலை. அங்குள்ள நிலைமை இலங்கைக்கே பெரிய வெட்கக்கேடுமாகும்.

கொழும்பில் உயர்தரக் கல்வி கற்கச்சென்றுள்ள நம் மாணவமாணவிகளின் தொகை ஐயாயிரத்துக்குமதிகமாயுள்ளது. இடவசதி, விடுதிவசதி, உணவு வசதி, நூல்நிலைய வசதி ஆகிய வசதிக்குறைவுகளை எதிர்நோக்கியுள்ள இந்த மாணவ மாணவியர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் நிகழ்த்தும் விரிவுரைகளைக் கேட்கும் வசதிகூட திருப்தியாக இல்லையாம்.

சர்வகலாசாலையிலுள்ள இடநெருக்கடிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கல்வி அமைச்சரும் மற்றும் யாபேரும் ஆலோசனைகள் நடத்தி இறுதியில் கொழும்பு குதிரைப்பந்தயஅரங்கை சர்வகலாசாலைப் பிரிவாக மாற்றினர். ஆனால் இந்த அரங்கிலிருந்த மின்சார விசிறிகளைக் கூட அதற்கு உரிமையாளர்களான குதிரைப்பந்தயச் சங்கத்தினர்அகற்றிச்சென்றுவிட்டனராம். பெருந் தொகையான மாணவர்களுக்குஒலிபெருக்கிமூலமே விரிவுரைகள் நிகழ்த்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. முதல் நாளே தமிழ்விரிவுரையாளர் ஒருவர் விரிவுரையை ஆரம்பிக்கையில் ஒலிபெருக்கி இயங்கமறுத்துவிட்டது.

உயர்தரக் கல்விபெறும் மாணவர்கள் தொகை அதிகரித்துள்ளதால் சர்வகலாசாலை வசதிகளை உடனடியாக அளிப்பதென்பது சுலபமல்லத்தான். புதிய ஒழுங்குகள் ஆரம்பத்தில் மாணவ, மாணவியருக்குச் சில கஷ்டங்களை ஏற்படுத்தியபோதிலும் அனுபவரீதியாக இக்குறைகள் மிகவிரைவில் நிவர்த்திசெய்யப்படவேண்டும். குதிரைப் பந்தய அரங்கை சர்வகலாசாலைப் பிரிவாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டபொழுதே சிறிது முன்யோசனையுடன் அதற்கான ஒழுங்குகளை கல்வி அமைச்சும் சர்வகலாசாலை அதிகாரிகளும் செய்திருந்தால் இன்று ஏற்பட்டுள்ள கஷ்டங்களை இலகுவாகத் தவிர்த்திருக்கலாம்.

மாணவ மாணவியர் நல்ல சூழ்நிலையில் தங்கியிருக்கவும் உடல் நலனைப் பாதிக்காத உணவு வசதி கிடைக்கவும், விரிவுரைகளைச் சரியாகக் கவனிக்கவும் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். இதற்கு வழி ஏற்படாவிடில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அந்தச் சூழ்நிலையிலிருந்து திருப்பி அழைத்துக்கொண்டு விடுவதே மேலாகும்.

## வேலை வாய்ப்புக்கள்

அரசாங்க இலாகாக்களிலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும், வேலையற்றிருக்கும் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும்ஒரு இடைக்கால ஏற்பாட்டை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. குடியேற்றத் திட்டங்கள், கிராமவிஸ்தரிப்புத்திட்டம் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களில் வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவும் அரசாங்கம் திட்டம்தயாரித்துள்ளதாகவும் அதே செய்தி கூறுகிறது. திட்டங்கள் வெறும் திட்டங்களாகவே இராமல் விரைவில் செயல்படுத்தப்படவேண்டும்.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவும் பெரும்பெரும் திட்டங்கள் தீட்டப்படுவதாக முன்னைய அரசாங்கம் வாய்ப்பந்தல்போட்டு வந்ததாகக் குறைகூறியவர்களே அதே செயலைச் செய்கின்றனர்.

அரசாங்க இலாகாக்களிலும், கூட்டுஸ்தாபனங்களிலும் பலருக்கு வேலைவாய்ப்புஅளிப்பதற்கான ஒழுங்குகள் சரியான முறையில் செயல்படுத்தப்பட்டால் கூட்டுஸ்தாபனங்களின் உற்பத்தியையும் பெருக்க வழிகிடைக்கும்.

கூட்டு ஸ்தாபனங்களில் வேலைவாய்ப்பு அளிப்பதிலும், குடியேற்றத்திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகியவைகளில் நிலம் வழங்குவதிலும், வேலைவாய்ப்பளிப்பதிலும் அந்தந்தப் பகுதி மக்களுக்கு முதலிடம் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன் மூலம்தான் கிராமப்பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை ஓரளவாவது திருப்திகரமாகச் செயல்படுத்தமுடியும்.

---

### தையல் நிலயம்

கிளிநொச்சி, செவ்.

''பெண்கள் பலரும் சங்கங்களில் சேர்ந்து பொருளாதார முன்னேற்றத்திற்கு பாடுபட்டால் எங்கள் வறுமையை நாமே ஒழிக்க முடியும்'' என்று படித்த இளைஞர் சங்கத்தினால் கணேஷபுரத்தில்புதிதாக அமைக்கப்பட்ட தையல் பாடசாலையைத் திறந்து வைத்துப் பேசிய கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கூறினார்.

## விவசாயத்தில் ஈடுபடும் இளைஞரை மணமுடிக்க முன்வாருங்கள்
### இளம் பெண்மணிகளுக்கு நீதியரசரின் அழைப்பு

குரும்பசிட்டி, செவ்.

''இன்று நமது நாட்டில் கல்வியே பிரதான அம்சமாக கருதப்படுகின்றது. அரசாங்க உத்தியோகம் கிடைக்கும் என நம்பிக்கை கொண்டு பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆனால் இவர்கள் எல்லாம் அரசாங்க வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று நினைப்பது தவறானதாகும். எனவே விவசாயம் வர்த்தகம், கைத்தொழில் போன்ற தொழில்களை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும். வெளி தேசங்களில் படித்த வாலிபர்கள் இந்த வகையான தொழில்களிலேயே ஈடுபட்டு உழைக்கின்றனர். அதனால் தங்களுக்கு நல்ல பயனையும் முன்னேற்றத்தையும்தேடிக் கொள்வதோடு நாட்டு வளத்தையும் பெருக்க உதவுகின்றனர்.''

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் மன்ற வருடாந்த விருந்துபசார வைபவத்திற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட நீதியரசர் கலாநிதி எச். டபிள்யூ தம்பையா கியூ. சி. பேசும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விருந்துபசார வைபவத்திற்கு மாணவர் மன்றத் தலைவர் திரு. எஸ். சச்சிதானந்தம் தலைமை வகித்தார்.

நீதியரசர் தம்பையா தமது சொற்பொழிவின் போது மேலும் கூறியதாவது:-

''தமிழ் மக்களின் கலை, கலாச்சார பண்பாடுகளையும் சமய ஆர்வத்தையும் நல்ல ஒழுக்கத்தையும் பெண்களே வளர்த்தார்கள் என்பதை பழம் பெரும் இலக்கியங்கள் மூலம் அறிகின்றோம். குடும்ப வாழ்க்கையில் எந்த வகையான வறுமை நிலவினாலும் பெண்கள் ஒத்துழைத்து சமுகத்தை முன்னேற்றமடையச் செய்ய முன்மாதிரியாக நடாத்த வேண்டும். எதிர்காலத்தில் உத்தியோகத்தரை மட்டும் மணக்க வேண்டுமென்ற ஆசைக் கனவுகளை ஒத்தி வைத்து விவசாய கைத்தொழில்களில் ஈடுபடும் வாலிபர்களை மணம் புரிய பெண்கள் முன்வர வேண்டும்.

கல்லூரியின் பொன்விழா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற இவ் விருந்துபசார விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, கல்லூரி அதிபர் திரு. ரி. ஜெயரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### இலவச விதைநெல்

கிளிநொச்சி, செவ்.

பொதுவாக கரைச்சிப் பகுதி விவசாய மக்களினதும் குறிப்பாக உருத்திரபுரம் 8-ம், 10-ம் வாய்க்கால் விவசாய மக்களினதும் சார்பில் கிராம முன்னேற்றச் சங்க காரியதரிசிகள் கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்தை பேட்டி கண்டு விதைப்பதற்கு வேண்டிய விதை நெல்லை இலவசமாக வழங்குவதற்கு ஒழுங்கு செய்யுமாறு வேண்டிக் கொண்டனர். இதற்கிணங்க அவர் இலவச விதை நெல்பற்றி அரசாங்க அதிபருக்கு தந்தி மூலம் அறிவித்துள்ளார். இதனை அரசாங்க அதிபர் ஏற்று கொலனி அதிபருக்கு நெல் தேவைப்படும் பட்டியலை அனுப்புமாறு தந்தி மூலம் கேட்டுள்ளார்.

---

### கடற்படை நிலயத்தில் 10-வது ஆண்டுவிழா

சுழிபுரம், செவ்வாய்

காரைநகர் கடற்படை நிலயத்தினர் தமது பத்தாவது ஆண்டுநிறைவுவிழாவை இம்மாதம் 13-ம்,14-ம் திகதிகளில் கொண்டாட ஏற்பாடுசெய்துள்ளார்கள். 13ம் திகதி யாழ்ப்பாணத்தில் வாத்திய இசை நிகழ்ச்சிகளும், 14-ம் திகதி காரைநகரில் விளையாட்டுப் போட்டிகள், நீச்சல் போட்டிகள் ஆகியனவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குக் கடற்படைத் தள பதி [illegible] பரிசுகள் வழங்குவார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

தால் பொலிசார் உடன் அவரைப் பிடித்து வெளியேற்றி நடவடிக்கை எடுக்கிறார்களாம்.

கொழும்பில் கூட தியேட்டர்களில் ''தயவுசெய்து புகைக்காதீர்கள்'' என்று விளம்பரம் செய்கின்றார்கள். ஆனால் அதை யாரும் லட்சியம் செய்வதாகத் தெரியவில்லை.

''ஜனநாயகத்தில் யாருக்கும் ''புகைக்கும் சுதந்திரம்'' உண்டுதான்! ஆனால் அந்த சுதந்திரம் பிறரது சுகாதாரத்தையும் சுதந்திரத்தையும் பாதிக்காமல் இருக்கவேண்டும். மற்றவருக்கு எக்காரணம் பற்றியும் உபத்திரவம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதவசியம்.

ஆனால் இங்கோ பொதுவாக தியேட்டர்களில், ஏர் கண்டிஷனுக்கு ''பதில்'' ''குளிர்சாதனம்'' செய்வதற்குப் பதிலாக' புகைசாதனம்' செய்யப்பெறுகின்றது! நம் பொதுமக்கள், தங்கள் நகரபிதாக்களை அணுகி இந்த அவலநிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று ஆங்காங்கே வற்புறுத்தவேண்டும். வாக்காளர் தக்கபடி வற்புறுத்தினால், நமது ஏழைப்பங்காளர்களான நகர பிதாக்களும் சும்மா இருக்கமுடியுமா? எல்லாம் பொதுமக்களாகிய நம் கையில்தான் இருக்கிறது.

ஃ ஃ ஃ

இந்திய— பாகிஸ்தான் பிரச்னையும் போராட்டமும் சமாதானமாகத் தீருவதற்காக சுவாமி சுத்தானந்தர், சென்னை அடையாற்றிலே தமது ஆசிரமத்தில் மௌன விரதம் பூண்டு தனித்தவம் புரிவதாயும், இரண்டுமாதங்களுக்கு வெளியே வரமாட்டாரென்றும் தெரிகிறது.

ஃ ஃ ஃ

சூழும் துயரம் அறுப்பார் போலுந் தோற்றம் இறுதியாய் நின்றார் போலும், ஆழுங்கடல் நஞ்சை யுண்டார் போலும் ஆடலுகந்த அழகர் போலுந், தாழ்வின் மனத்தேனையாளாக் கொண்டு தன்மையளித்த தலைவர் போலும், எழு பிறப்பு மறுப்பார் போலும் இன்னம் பர்த்தான்தோன்றியீசனாரே.

— அப்பர்சுவாமிகள்.

## ஐயாறன் எழுதுவது

மிக மனச்சலிப்புடனே ஓர் அன்பர் வந்தார். தன் அருமைப் புதல்வி கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு சினிமாப்படத்துக்குஅழைத்துச் சென்றாராம். மேல் வகுப்பிலும் தாங்க முடியாத கூட்டம். போதாக்குறைக்கு கதவுமூடி படம் காண்பிக்க ஆரம்பித்ததும், பலரும் சிகரெட் பற்ற வைத்து குஷியாக ஆரம்பித்துவிட்டனராம். புகை மண்டலங்கள் கிளம்பிமுகில் கூட்டங்களாக மண்டபமனைத்தும் மண்டிவிட்டது. உட்கார்ந்திருக்கவே சகிக்கவில்லை. 15 நிமிஷத்தில் எழுந்து வந்துவிடவே அன்பர் முயன்றாராம். ஆனால் இருபுறமும் கூட்டம். முழுதும் பார்த்துவிட புதல்வி விரும்பியதாலும் 'கிரகச்சாரமே' என்று அந்தப் புகையைக் 'சாப்பிட்டு' வந்ததாகவும் அந்த நச்சுப் புகையை உட்கொண்டதால் தமக்கு ஒருவித சுகவீனமும் ஏற்பட்டதாயும் இனிமேல் இவ்வித சினிமாச்சாலைப் பக்கமே செல்வதில்லை என்று தீர்மானித்து விட்டதாகவும் கூறி, சினிமா மண்டபத்தில் புகைக்கக் கூடாதென்று நமது மாநகரசபையாரும் சுகாதார அதிகாரியும் உத்தரவு போடப்படாதா என்று உணர்ச்சியுடன் கேட்டார்.

அந்தச் சினிமாச்சாலையில் கூரையும் மிகவும் தாழ்வாக இருப்பதால், புகை மண்டபமெங்கும் சீக்கிரத்தில் நிறைந்து, மூச்சுவிடவும் முடியவில்லையென்றும் சினிமாச்சாலை அமைப்பு இப்படி இருப்பது சட்டப்படி சரியா என்றும் கேட்டார்.

ஃ ஃ ஃ

இதைப்பற்றி ஒரு முனிசிபல் அதிகாரியை விசாரித்தேன். இதைச்சொன்னதும் அவரும் இவ்வித நிலையை வன்மையாகக் கண்டித்து, சினிமாசாலைகள் எப்படி அமைக்கப்பட வேண்டுமென்று சட்டதிட்டங்கள் இருப்பதாயும் இதன்படி மேயர் கண்டிப்பான நடவடிக்கை எடுத்து, அடுத்த வருடம் லைசென்ஸ்கொடுக்க மறுத்துவிடப் போவதாகவும் சொன்னார். இதைச் சொல்லிவிட்டு 'ஆனல்' என்று மெதுவாக இழுத்தார். என்ன 'ஆனல்' என்று கேட்டதற்கு, நகர பிதாக்களை தியேட்டர் முதலாளிகள் அணுகி அவர்களை சரிக்கட்டிவிட்டால் என்ன செய்வது என்றார். அட கடவுளே!

ஃ ஃ ஃ

முன் ஒருசமயம் இதைப் பற்றி இப்பத்தியில் எழுதியதைக் கண்டதும் நமது நகரபிதாக்களில் ஒருவர் மறுநாளே என்னுடன்டெலிபோனில் பேசினார். சினிமா தியேட்டர்களில் புகைபிடிக்கக்கூடாதென்று தடுக்கத்தாம். பன்முறையும் பிரேரணை கொண்டுவந்ததாயும் மற்ற ''பிதாக்கள்'' இதற்குக் குறுக்கேநின்று தடுத்துவிட்டார்களென்றும் சொல்லி வருந்தினார். உண்மைதானா?

சென்னையிலே சில புதிய சினிமா தியேட்டர்களைப் பார்த்தேன். ''சாந்தி'' எனும்தியேட்டருக்குச்சென்றிருந்தேன். அதைவிட்டு வெளிவரவே மனமில்லை. சிவாஜி கட்டிய தியேட்டராம் அது. புதிய தியேட்டரெல்லாம் 'ஏர்கண்டிஷன்' செய்திருக்கிறார்கள். எந்தத் தியேட்டரிலும் புகைக்கப்படாதென்று கண்டிப்பான சட்டம். யாராவது புகைத்

(4-ம் கலம் பார்க்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தென்ரொடீஷிய சுதந்திரப்பேச்சுக்கள் தோல்வி: பிரதமர் ஸ்மித் தாயகம் திரும்பினர்

## அடுத்தசெயல்சுதந்திரபிரகடனமாம் எவரும் தடுக்கமுடியாது என்கிறர்

### இரத்த ஆறு ஓடும் என ஆபிரிக்கதலைவர் எச்சரிக்கை: தடுக்குமாறு ஐ.நா. கமிட்டிதீர்மானம்

லண்டன், அக். 12

பிரிட்டனுக்கும் ரொடீஷியாவுக்குமிடையேயான பிளவு சீர்செய்ய முடியாதபடி அதிகரித்திருப்பதாயும், தனது அடுத்த நடவடிக்கை ஒருதலைப்பட்சமாகச் சுதந்திரப் பிரகடனம் செய்வதே என்றும், இதை எவரும் நிறுத்தமுடியாது என்றும் தென்ரொடீஷியப் பிரதமர் திரு. இயான்ஸ்மித் கூறினர்.

லண்டனில் சுதந்திரப் பேச்சுக்கள் நடத்தித் தோல்வியுற்ற திரு. ஸ்மித் இன்று தாயகம் திரும்பினர். மந்திரி சபைக்கூட்டம் ஒன்றையும் அவர் நடத்தினர்.

நேற்று பிரிட்டிஷ் பிரதமர் வில்சனை கடைசிமுறையாகச் சந்தித்தபின், 'எவருடைய' போக்கிலும் மாற்றம் இல்லை' என அவர் கூறினர்.

'எங்களுக்கு வேண்டியது சுதந்திரமே. ரொடீஷியா இப்போது வெகு ஐக்கியமாகவும், உறுதியுடனும் இருக்கிறது' என்றுர் அவர்.

திரு. ஸ்மித் தாயகம்திரும்பியபின், வர்த்தகர்களும், சுரங்க முதலாளிகளும் அவரைச் சந்தித்து, ஒரு தலைப்பட்ச சுதந்திரப் பிரகடனத்தைக் கைவிடும்படி அவரைக் கேட்கவிருந்தார்கள்.

**தடுக்குமாறு தர்மகர்த்தா சபை தீர்மானம்**

தென்ரொடீஷியா ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்வதை சாத்தியமான சகலவழிகளிலும் தடுக்குமாறு பிரிட்டனைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை ஐ. நா. தர்மகர்த்தா கமிட்டி நிறைவேற்றியிருக்கிறது. தீர்மானத்திற்கு ஆதரவாக 95 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் கிடைத்தன. தென்னுபிரிக்கா, போர்த்துக்கல் ஆகிய இருநாடுகள் எதிர்த்து வாக்களித்தன. பிரான்ஸ் வோட்டளிக்கவில்லை. பிரிட்டன் ஆஜராகவில்லை. தீர்மானம் இன்று மகாசபையின் பரிசிலனைக்குச் செல்லும்.

ஐ. நா.விலுள்ள பிரிட்டிஷ் பிரதிநிதி கெலகன்பிரபு ரொடீஷியா சம்பந்தமாக ஆராயும் பொருட்டு லண்டனுக்குத் திரும்பியிருக்கிறர்.

**கனடா எச்சரிக்கை**

கனடா பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தென்ரொடீஷியா ஒருதலைப் பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்யுமானுல் அதை கனடா அங்கீகரிக்காது என எச்சரித்திருக்கிறர்.

**வெள்ளையர் கொல்லப்படுவர்**

ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டால் தென்ரொடீஷியாவில் இரத்த ஆறு ஓடும் என ஆபிரிக்க தேசியத்தலைவர் எச்சரித்திருக்கிறர். வெள்ளையர்கள் படுகொலை செய்யப்படுவார்கள். எங்களால் இயன்றவரை வெள்ளையர்களைத் தாக்கிக் கொல்லுவோம் என்றும் அவர் கூறினர்.

**ஜோன்சனுடன் ஆலோசனை**

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டூவர்ட் வாஷிங்டனில் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்குடன் ரொடீஷியா பற்றிப் பேசினர். திரு. ஸ்டூவர்ட் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் ஜனதிபதி ஜோன்சனையும் சந்தித்து இதுகுறித்து விவாதித்தார். ரொடீஷிபா பற்றி பாதுகாப்பு சபைக் கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறு ஐ. நா.விலுள்ள ஆபிரிக்க நாடுகள் கேட்டிருக்கின்றன:

தென்ரொடீஷியா ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்தால் கிளர்ச்சிக்காரர்களை இந்தியா ஆதரிக்கும் என ஐ. நா.வில் அறிவிக்கப்பட்டது.

## கி.பாகிஸ்தானைபிடிக்க இந்தியா திட்டமிட்டதாக குற்றச்சாட்டு

### கி. பாகிஸ்தானில் சுதந்திர கிளர்ச்சி வலுக்கிறதாம்

ராவல்பிண்டி, அக். 12

கிழக்குப் பாகிஸ்தான் மீது படையெடுத்து, அதை கைப்பற்ற பெரிய திட்டம் ஒன்றை இந்தியா தயாரித்திருந்ததாக பாகிஸ்தான் வானெலி அறிவித்திருக்கிறது.

இதுசம்பந்தமான தஸ்தாவேஜுகள், மேற்குப்பாகிஸ்தானில் இந்திய ராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்டிருப்பதாய் அது கூறியது.

72 மணி நேரத்தில் மேற்குப் பாகிஸ்தானைப் பிடித்த பின் கிழக்குப் பாகிஸ்தானைப் பிடிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது என்றும், ஆனல் மேற்குப் பாகிஸ்தானைப் பிடிக்கும் முயற்சியும், கிழக்குப் பாகிஸ்தானைப் பிடிக்கும் முயற்சியும் பலத்த சேதத்துடன் முறியடிக்கப்பட்டதென்றும் அது கூறியது.

'இத்திட்டத்தை நிறைவேற்ற கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் இந்தியா தன் முதல்தர துருப்புக்களைக் குவித்துவைத்திருந்தது. எல்லை நெடுக 5 மைல் தூரத்திற்கு மக்கள் வெளியேற்றப்பட்டார்கள். துருப்புக்கள் முன்னேறுவதற்கு ஆயத்தமாக இந்திய விமானங்கள் கிழக்குப் பாகிஸ்தானில் குண்டுகளை வீசின. நாசவேலைக்காரர்கள் இறக்கப்பட்டனர்' என்றும் அது கூறியது.

இதற்கிடையில் கிழக்குப் பாகிஸ்தானில் தனிநாட்டுக் கிளர்ச்சி அதிகரித்துவருவதாயும், ஆர்ப்பாட்டங்களை அடக்கத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாயும் அறிவிக்கப்படுகிறது. அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி ஒரு யுத்தநிலை போன்ற காட்சியைப் பிரதிபலிப்பதாகவும் கூறப்படுகிறது.

## பாக். முட்டுக்கட்டை

சிங்கப்பூர், அக். 12

காமன்வெல்த்தில் சிங்கப்பூரை அனுமதிக்கும் விஷயத்தில், பாகிஸ்தான் முட்டுக்கட்டை இட்டு வருவதாக இங்கு வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது. சமீப யுத்தத்தில் சிங்கப்பூர் இந்தியாவை ஆதரித்ததே இதற்குக் காரணமாம்.

அதேசமயம் சீனவை ஐ. நா.வில் அனுமதிப்பதைத் தாங்கள் எதிர்ப்பதாக கெபோட், நைகர் ஆகிய இரு ஆபிரிக்க நாடுகள் அறிவித்திருக்கின்றன.

## 'யுத்த நிறுத்தத்திற்கு பின் பாக். பிடித்தநிலைகளை அங்கீகரியோம்'

### இந்தோ - பாக். நிலைமைகுறித்து ஜோன்ஸன்-ஹம்ப்ரேஆலோசனை

நியூயோர்க், அக். 12

செப்டம்பர் 23-ம் திகதி யுத்த நிறுத்தத்திற்குப் பின், பாகிஸ்தான் கைப்பற்றிய நிலைகளைத் தாம் அங்கீகரிக்க முடியாது என யுதாண்டுக்கு இந்தியா தெரிவித்திருக்கிறது.

நிரந்தரப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி அனுப்பியுள்ள கடிதத்தில் ''யுத்த நிறுத்தத்திற்குப்பின் இந்தியப்படைகள் எப்பகுதியிலும் முன்னேறவில்லை. பாகிஸ்தான் மட்டுமேயுத்த மீறல் செய்து வருகிறது'' என்று கூறியிருக்கிறர்.

துருப்புகளை வாபஸ்பெற வேண்டும் என யுதாண்ட் குறிப்பிட்டிருப்பது சரியல்ல என்றும், ஆயுதம் தரித்த எல்லா ஊடுருவலாளர்களும் வாபஸ்பெற வேண்டும் என்றும் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**பாக். யோசனை நிராகரிப்பு**

டில்லியில் முன்பு அமெரிக்க தூதராய் இருந்ததிரு. ஜோன் ஷெர்மான் கூப்பர், காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பை நிராகரித்திருக்கிறர்.

4 நாடுகள் கமிஷன் ஒன்றை சண்டைப் பிரதேசத்துக்கு அனுப்ப வேண்டுமென்ற பாகிஸ்தான் யோசனையை ரஷ்யா நிராகரித்திருக்கிறது. இருநாடுகளுக்குமிடையே நேரடிப் பேச்சுகள் நடைபெற வேண்டும் என அது கூறியது.

இதேசமயம் பல அரங்குகளிலும் பாகிஸ்தானியத் துருப்புகள் யுத்தநிறுத்தத்தை மீறி வருவதாக டில்லிக்கு செய்திகள் கிடைத்து வருகின்றன.

**கப்பல்களைப் பிடிப்போம்**

நேற்று இந்திய சட்டமந்திரி திரு. ஏ. கே. சென் விடுத்த ஒரு அறிக்கையில், கப்பலில் இந்தியாவுக்கு வரும் பொருட்களை பாகிஸ்தான் மறித்து வைத்திருப்பதற்கு எதிர் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியிருக்கிறர். நடுக்கடலில் பாகிஸ்தானிய கப்பல்களையும் சாமான்களையும் கைப்பற்ற வழியுண்டு என அவர் கூறியிருக்கிறர்.

கிழக்குப் பாகிஸ்தானில் ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள் காவல்முகாமில் வைக்கப்பட்டிருப்பதாய் அவர் கூறினர்.

**பூட்டோ நியூயோர்க்கில் நீடிப்பார்**

நேற்று நியூயோர்க்கில் பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ, ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிக்கோவுடன் காஷ்மீர் தீர்வுபற்றிப்பேச்சு நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்புசபை அங்கத்தினர்களுடன்திரு. பூட்டோ நடத்தும் தொடர்ச்சியான பேச்சுகளில் இதுவும் ஒன்று என பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் இதுபற்றிக் குறிப்பிட்டார்.

திரு. பூட்டோ சிறிது காலம் ஐ. நா.வில் தங்குவார் எனவும் கூறப்படுகிறது. ஆனல் பாதுகாப்பு சபைக் கூட்டம் எதுவும் கோரப்படவில்லை.

## "வெளிநாடுகளில் பிரசாரம் போதுமானதாய் இல்லை"

### அண்ணதுரை கண்டனம்

சென்னை, அக். 12

இந்திய-பாகிஸ்தான் சண்டையின்போது ஜப்பானியப் பத்திரிகைகள் அனைத்தும் பாகிஸ்தானை ஆதரித்ததாக, ஜப்பானிலுள்ள ஒரு நண்பரிடமிருந்து தமக்குக் கடிதம் கிடைத்துள்ளதாக திரு. அண்ணுதுரை இங்கு கூறினர்.

வெளிநாடுகளில் இந்தியாவின் பிரசாரம் சரிவரயில்லாததே இதற்குக் காரணமென அவர் மாணவர் மன்ற முத்தமிழ் விழாவில் பேசியபோது மேலும் கூறினர்.

சண்டையில் நமது நிலை பற்றி நமது தூதர்களுக்கு முன்னதாகத் தக்கவாறு அறிவிக்கப்படவில்லை. கட்ச் உடன்பாடு ஏற்பட்டபோது நான் ஜப்பானில் இருந்தேன். கட்ச் தகராறைப் பற்றி விளக்குமாறு தூதரக ஊழியர்கள் சிலர் என்னைக் கேட்டனர். விவரமே தெரியாத நிலையிலுள்ள இவர்கள் ஜப்பானிய மக்களிடம் பிரச்னையை எவ்வாறு எடுத்துக் காட்டியிருப்பர் என்பது பற்றி வியப்படைந்தேன் என்றுர் அண்ணுதுரை.

## "பாக். விமானப்படை பாதி அழிந்தது"

— பிராவ்டா

மாஸ்கோ, அக். 12

இந்தோ-பாகிஸ்தான் யுத்தத்தில் பாகிஸ்தான் தனது விமானப்படையில் அரைவாசி விமானங்களை இழந்துவிட்டது என ரஷ்யப் பத்திரிகை பிராவ்டா கூறியிருக்கிறது.

**ஜோன்ஸன் ஆலோசனை**

ஜனதிபதி ஜோன்ஸனும் உதவிஜனதிபதி ஹம்ப்ரேயும் நேற்று இந்தோ-பாகிஸ்தான் நிலைமை குறித்துப் பேச்சு நடத்தினர். பின் திரு. ஹம்ப்ரேயும் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டூவர்ட்டும் காஷ்மீர் பற்றிப் பேசினர்.

ஸ்ரீநகரில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதைத் தொடர்ந்து சிலபகுதிகளில் பகல்நேர ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாய் பாகிஸ்தான் வானெலி அறிவித்திருக்கிறது.

**பாகிஸ்தான் எச்சரிக்கை**

பாகிஸ்தான் இராணுவம் இப்போது புனரமைப்பு செய்யப்பட்டிருக்கிறதென்றும் இந்தியர்கள் மீண்டும் தாக்கினல் செம்மையாக உதைவாங்குவார்கள் என்றும் பாகிஸ்தான் சேனதிபதி ஜெனரல் மூசா கூறியிருக்கிறர்.

துருக்கியில்

## ஜஸ்டிஸ் கட்சி வென்றது

அங்காரா, அக். 12

துருக்கி பொதுத்தேர்தலில் வலதுசாரியான ஜஸ்டிஸ் கட்சி பெரும்பான்மை வெற்றியைப் பெற்றிருக்கிறது. மொத்தமுள்ள 450 ஸ்தானங்களில் 260 ஸ்தானங்களை அது கைப்பற்றியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசாங்க திணைக்களங்களின் ஆமைவேகம் பற்றி எம். பி. பிரஸ்தாபம்

யாழ்ப்பாணம், புதன்

'அரசாங்க திணைக்களங்களின் அமைப்பு முறையும் செயலாற்றுமுறையும் மக்களின் நலத்திற்கேற்ற பணிகளை விரைவாக செய்யத்தக்கதாக அமையவில்லை. சில திணைக்களங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுதும் கடிதங்களுக்கு கூட மறுமொழி கிடைப்பதில்லை'.

இவ்வாறு கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் பளையில் தமிழரசுக்கட்சி கிளை ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

துணுக்காய் பிரிவிலுள்ள மல்லாவியில் உபதபால்நிலையத்திற்கு—காணித் திணைக்களம் ஒரு கட்டடம் கட்டிக்கொடுத்து இரண்டு ஆண்டுகளாகியும் இந்தக் கட்டடம் பூட்டப்பட்டிருக்கின்றது. இக்கட்டடத்தை உபதபால் நிலையமாக ஆரம்பிக்கும்படி அமைச்சரையும் தபால் அதிபரையும் பலமுறை பலவகையாகக்கேட்டிருந்தேன். 'கவனிக்கப்படுகிறது' என்ற வழமையான பதில் தான் கிடைத்தது.

அரசாங்க திணைக்களங்களின் செயல்முறையை இதுவரை திருத்தி அமைக்க எந்த அரசாங்கமும் நடவடிக்கைகள் எடுக்காத மர்மம் என்னவென்று விளங்கவில்லை.

ஆக்கவேலைகளுக்கு ஒவ்வொரு திணைக்களமும் ஐந்து ஆண்டுதிட்டங்களை உடனே வகுத்துசெயற்படுத்தவேண்டும் என்ற பிரேரணை ஒன்றை அரசாங்ககட்சி பாராளுமன்ற குழுக்கூட்டத்திற்கு கொண்டுவர எண்ணியுள்ளேன். இது ஏற்றுக்கொள்ளப்பட்டால் பின்தங்கிய தொகுதிகள் முன்னேற வாய்ப்புண்டு.'

பின்வருவோர் பளை தமிழரசுக்கட்சிக்கிளையின் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. த. வேலுப்பிள்ளை, துணைத்தலைவர்: திரு. தா. வேலுப்பிள்ளை. செயலாளர்: திரு. பொ. திருநாவுனம், துணைச்செயலாளர்: திரு. சி. சச்சிதானந்தம், பொருளாளர்: திரு. இ. நாகேந்திரம், 10 பேர் கொண்ட ஒரு நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஐக்கியநாணயசங்க கூட்டம்

சுழிபுரம், செவ்

தொல்புரம்—மூளாய் ஐக்கிய நாணயசங்க மேற்பார்வைச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பண்ணாகம் மெய்கண்டான் உயர்தரபாடசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. த. பொன்னம்பலம்தலைமையில் நடைபெற்றது. காலை போதனவகுப்பு நடைபெற்றது. கூட்டுறவுஉதவி ஆணையாளர் கே. எஸ். பொன்னுத்துரை,' வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. இராசரத்தினம் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. சி. கனகரத்தினம், கமத்தொழில் உதவிஆணையாளர் திரு. அ. சிவசிதம்பரம், காரியாலய பரிசோதகர் மு. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரை வழங்கினர். பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

## நாகாலந்து

ஷில்லாங், அக். 12

வருகிற வெள்ளிக்கிழமை முதல் ஒருமாதகாலத்திற்கு சண்டை நிறுத்தத்தை நீடிக்க தலைமறைவு நாகர்கள் இணக்கம் தெரிவித்திருப்பதாய் ஸ்ரீஜயப்பிரகாஷ்நாராயண் அறிவித்தார்.

## பிரயாணிகள் சங்கம் பேட்டிகண்டது

சுழிபுரம், செவ்

நவாலி-சங்கரத்தை பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் முதலியார் பி. எம். சங்கரப்பிள்ளை, உ. ந. தேவகடாட்சம் ஆகியோர் தலைமையில் நவாலி-சங்கரத்தை பஸ்பிரயாணிகள் போக்குவரத்துக்காக அடையும் கஷ்டங்களை எடுத்துக்கூறும் நோக்குடன் யாழ். இ. போ. ச. உதவி மனேஜரை பேட்டிகண்டனர். இவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட யாழ். இ, போ. ச. உதவி மனேஜர் திரு. நடராசா மிக விரைவில் பஸ்களைச் சேவைக்கு விடுவதாகவும், சில குறுகிய தூர இடத்துக்கு நவாலி-சங்கரத்தை பஸ்சேவையை உடன்விடுவதாகவும் வாக்குறுதியளித்துள்ளாராம்.

## ஏலத்தில் விடப்படும்

கொழும்பு, செவ்

25 ஆயிரம் பிளேடுகள், ஒரு தாலிக்கொடி உட்பட பல விலையுயர்ந்த பொருட்கள் ஆகியன இம்மாதம் 19ம் திகதி பகல் 10 மணிக்கு சுங்கப்பகுதியினரால் பொது ஏலத்தில் விடப்படவிருக்கின்றன.

இப்பொருள்களெல்லாம் இறக்குமதிக் கட்டுப்பாட்டை மீறி இங்கு வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டபோது சுங்கப் பகுதியினரால் பறிமுதல் செய்யப்பட்டவை.

## குற்றஞ்சாட்டப்பட்ட மாணவி விடுதலை

உடுப்பிட்டி, செவ்

கம்பர்மலையைச் சேர்ந்த சங்கரன் கைம்பெண் லட்சுமியம்மா (34 வயது) என்பவரைக்கடந்தஜூலைமாதம் 23-ந் திகதி கத்தியால் குத்தியதாக அதேஊரைச் சேர்ந்த குட்டியன் அருந்தவமணி என்னும் 21 வயது இளம் கல்லூரி மாணவிமீது வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் கௌரவ நீதிபதி திரு. றெபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. திருமதி லட்சுமியம்மா, வேலன் தம்பிமுத்து, குட்டியன் அருந்தவமணி ஆகியோர் சாட்சியமளித்தனர். எதிரி சுற்றவாளியாகக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

# தகப்பன் வைத்த பொறிக்கு மகள் பலியானர்

காலி, செவ்வாய்

மிருகங்களைப் பிடிப்பதற்காக தந்தையாரால் வைக்கப்பட்ட பொறி பதின்மூன்று வயது நிறையாத மகளின் உயிரையே பலிவாங்கிய பரிதாபகரமான சம்பவம் இங்கு இடம் பெற்றுள்ளது.

கம்பறஹடாவைச் சேர்ந்த சோமாவதி என்ற சிறுமியின் மரணவிசாரணையின் போது மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

காட்டில், கிடங்குகள் வெட்டி, உள்ளே வெடிமருந்து வைக்கப்பட்டு அதன்மேல் கிடங்கைமறைத்து இலைகள் பரவப்பட்டிருந்ததால், சோமாவதிக்கு அதுபற்றி எதுவும் தெரியாததால் அதன்மேல் நடந்தபோது கிடங்குக்குள் விழுந்து அவருக்குக் காயமேற்பட்டதாகவும், அங்கிருந்து ஹினிமுமா ஆஸ்பத்திரிக்கு அவர் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து உடுஹமா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணத்துக்குள்ளானர் எனவும் மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

சோமாவதியின் தகப்பனர் தமது சாட்சியத்தில், அப்பொறிக்கிடங்கு தன்னுடையதென்று சொன்னர்.

விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்மானிக்கப்பட்டது.

## புதிய வழக்கறிஞர்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூரைச் சேர்ந்த தங்கராசா தம்பதிகளின் புதல்வன் திரு. இராஜராஜேஸ்வரன் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் வழக்கறிஞராக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் சட்டக்கல்லூரியில் பயிலுங்கால் சட்டமாணவர் சங்க பொதுக் காரியதரிசியாகக் கடமையாற்றினர். றோயல் கல்லூரி பழைய மாணவரான இவர் சட்டக்கல்லூரியில் தமிழ், ஆங்கில விவாதங்களில் கலந்து கொண்டார். சேர் வைத்திலிங்கம் துரைசாமியின் பேரனரான இவர் கொழும்பில் தொழில் புரிவார்.

## புதியநிர்வாகிகள்

வேலணை, செவ்.

வேலணை மண்கும்பான் வெள்ளைக்கடற்கரைப்பள்ளிவாசல் பரிபாலனசபைக் கூட்டம் அண்மையில்நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்-குவாஸி எம்.எம். சுல்தான், உபதலைவர்-ஹாஸி. ஏ. எம். அப்துல் சாஹிபு ஆலிம், காரியதரிசி-கே. என். மீரான்முஹிதீன். உபகாரியதரிசி- எம். சேகுமதார், பொக்கிஷாதிபதி-எஸ். எம். மீரான்சாஹிப், பொதுச் செயலாளர்கள்-எம். எம். நெய்னுமுகமது, எம். எம். ஏகரீம், பொறுப்புமிகு உதவியாளர்களாக ஹாஜி. வி.எம்.எம். அப்துல் காதர், யூ.எம். ஐதுறூஸ், எம்.எம். முஹிதீன், கே.என். எம். மீரான்சாஹிப், எஸ். எஸ். அப்துல்காதர். இவ்வருடம் 26-10-65 முதல் 7-11-65 வரையில் நடைபெறவிருக்கும் செய்யது சுல்தான் அப்துல்காதர் ஒலியுல்லாஹ் மௌலூத்சரீபை இம்முறை மிகச்சிறப்பான முறையில் நடத்துவதாக இப்புதிய டிரஸ்டிகள் தீர்மானித்தனர்.


இதோ • அறிமுகப்படுத்துகிறோம்

இன்றைய லான்ட்மாஸ்டர்

Landmaster

நன்கு பரீட்சிக்கப்பட்டு, உலகப்பிரசித்திபெற்ற புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட JLO 5 ஹோஸ் பவர் மண்ணெண்ணை இயக்க என்ஜினுடன்

JLO என்ஜினில் இப்பொழுது எண்ணெயில் அமுக்கப்பட்ட வாயுத துப்புரவாக்கி (ஒயில் பாத் எயர் கிளீனர்) அமைக்கப்பட்டுள்ளது. அசுத்தங்களை வடிகட்டித் துப்புரவாக்குவதன் மூலம் ஆயுள் காலப் பாதுகாப்பை அளிக்கின்றது. ஆகக் குறைந்த இயக்கச் செலவில் ஆயுள் காலப் பாவனையையும், நிகரற்ற சேவையையும் நிச்சயப்படுத்துங்கள்.



• இப்பொழுது அமைப்புப் பெறும் ஹெட்லைட் (வெளிச்சம்) இரவிலும் இயக்குவதை நிச்சயப்படுத்துகின்றது.

ஆயிரம் லான்ட் மாஸ்டர் பாவனையாளர்கள் சொல்வது பொய் யாகாது!
பயிரிடுங்கள், அதிகமாக, துரிதமாக, சிக்கனமாக.
நன்முக.
இன்றைய லான்ட் மாஸ்டர் உதவிகொண்டு.

Landmaster

ஏக விநியோகஸ்தர்கள்:—
BROWNS GROUP BG ESTABLISHED 1875
பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டேட்
தேவநம்பியதிஸ வீதி, கொழும்பு 10.



வெங்காயம், தக்காளி, மிளகாய், கத்தரி, கோவா முதலிய பயிர்களுள் உண்டாகும் களைப்புல்லை அழிப்பதற்கு புதிய மருந்து

டெக்தால்

DACTHAL

Agents:

PHONE: 397 ROYAL DISPENSARY JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### பிரிவிடுதல்நொத்தீஸ்

சாவகச்சேரி
டிஸ்திறிக் கோட்டில்
மீசாலை தெற்கு தம்பிப்பிள்ளை உமாபதிசிவம்
— வழக்காளி

இலக்கம். 3073
எதிராக

வெள்ளவத்தை, 15இராச சிங்கவீதி:-
1. தம்பு தம்பிப்பிள்ளை
2. பெண் மீனாட்சி
சுன்னாகம், கந்தரோடை
3. விசுவனாதர் தருமலிங்கம்
வெள்ளவத்தை. 39, பெர்ணாண்டோ வீதி:-
4. நாகமுத்து மகாலிங்கம்
5. பெண் தெய்வநாயகி
யாழ்ப்பாணம் திருநெல்வேலி, அரசடி ஒழுங்கை:-
6. தில்லையம்பலம் காத்திகேசு கைம்பெண் சிவபாக்கியம்.
— எதிரிகள்

இதன்கீழ் உள்ள ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்துக்கு 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமையமேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதென்று இத்தால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வழக்கிலுள்ள எதிரிகளும் குறித்த ஆதனத்தில் உரிமை கோருகிறவர்களும் மேற்படி கோட்டில் 1965-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14-ம் திகதி காலை 9 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

1965-ம் ஆண்டு புரட்டாதி மாசம் 30-ம் திகதி
செ. சடாச்சரம்
சக்கிடுத்தாருக்காக

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோயிற்பற்று மீசாலை தெற்கு இறை: ''பண்டைப்பேச்சி மலையாளன்காடு கொத்தன் கூடலும் மறுபிரிவுகளும் பரப்பு நிலை இலாச்சம் 139 குளி 2 1/4 ஆனால் அளவின்படி பரப்பு நிலை இலாச்சம் 129 குளி 15 1/10. இதற்கெல்லை கிழக்கு காலஞ்சென்ற N. சம்பந்தரின் ஆதனமும் K. உமாமகேசனின் ஆதனமும் றேட்டும் சுப்பிரமணியம் பெண் மங்கையர்க்கரசியின் ஆதனமும் றேட்டும், வடக்கு சுப்பிரமணியம் பெண் மங்கையர்க்கரசியின் ஆதனமும், V. கிருஷ்ணபிள்ளைக்கும் பெண் லீலாவதிக்குரிய ஆதனமும் V. பேரம்பலத்துக்குரிய ஆதனமும் வயித்திலிங்கம் கைம்பெண் கண்மணிக்குரிய ஆதனமும் கந்தசுவாமிகோயில கட்டப்படும் ஆதனமும் S. தம்பையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் மேற்கு 1-ம் 2-ம் எதிரிகளாகிய தம்பு தம்பிப்பிள்ளைக்கும் பெண் மீனாட்சிக்குரிய ஆதனமும் S. தம்பையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் றேட்டும் K. மார்க்கண்டுவுக்குமுரிய ஆதனமும் தெற்கு S. தம்பையாவுக்கும் மறுபேருக்குரிய ஆதனமும் V. நல்லதம்பிக்குரிய ஆதனமும் K. மார்க்கண்டுவுக்குரிய ஆதனமும் கந்தையா பெண் பராசக்திக்குரிய ஆதனமும் S. வேலுப்பிள்ளைக்குரிய ஆதனமும் பொது றேட்டுக்குப் போகும் வழக்காளிக்கும் 1-ம் 2-ம் எதிரிகளுக்கும் சொந்தமான ஒழுங்கையும் . சம்பந்தனின் உரிமைக்காரருக்குமுரியஆதனமும்K. உமா மகேசனின் ஆதனமும் சுப்பிரமணியம் பெண் மங்கையர்க்கரசியின் ஆதனமும் இதிலுள்ள கிணறுகள் பனைகள் தென்னைகள் செய்பயிருமதற்குரிய சகல சேர்மானங்களும். இக்காணி அடங்கலும். இக்காணி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் காணிப் பதிவுகந்தோரில்F. 361/298ல் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

செ. சடாச்சரம்
1208 சக்கிடுத்தாருக்காக

### பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை வடமேற்கு.
1. கனகரத்தினம் செல்வராசா.
2. பெண் பொன்னம்மா.
வழக்காளிகள்

இலக்கம்: 3069.

எதிராக

கைதடி வடக்கு:-
1. ஆறுமுகம் சுப்பையா
2. பெண் லெட்சுமிப்பிள்ளை
3. கார்த்திகேசு
4. பெண் நாகம்டா
5. சரவணமுத்து வில்லவராயன்
6. அகிலேசர் செல்லையா
7. இராமலிங்கம் சிற்றம்பலம்
கைதடி, தற்போது தெல்லிப்பளை:-
8. இராமலிங்கம் பொன்னம்பலம்
எதிரிகள்

இதன் கீழ் உள்ள ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்துக்கு:

1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற் கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வழக்கில் உள்ள எதிரிகளும் குறித்த ஆதனத்தில் உரிமை கோருகின்றவர்களும் மேற்படி கோட்டில் 1965-ம் ஞு ஐப்பசிமீ 14-ம் திகதி 9 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி

செ. சடாச்சரம்,
சக்கிடுத்தாருக்காக.
1965-ம்ஞு புரட்டாசிமீ 30.

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குளிக் கோயிற்பற்றுகைதடி இறை: கொற்றுவளைப்புலமும் கொய்வளைக் கலட்டியும் பரப்பு நிலை இலாச்சம் 50 (ஐம்பது). இந்தப் பரப்பு நிலை இலாச்சம் 50 க்கும் எல்லை கிழக்கு துரைச்சாமி ஐயர் குமாரசாமி ஐயருக்கும் சின்னத்தம்பி ஐயர் சோமசுந்தர ஐயருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு சின்னம்பலம் பொன்னையாவுக்குரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு வேலுப்பிள்ளை பொன்னையாவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதில் உள்ள பனைகளும் மற்றும் சகல புரோசனங்கள் மற்றுமதைச் சேர்ந்தவைகளுடன் இக்காணி யாழ்ப்பாண டிஸ்திறிக் காணிப்பதிவுக் கந்தோரில் F 267/124-ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

செ. சடாச்சரம்.
1270 சக்கிடுத்தாருக்காக.

### வீதியின் அவலநிலை

சுழிபுரம், செவ்.
சுழிபுரம் காளுவன் சந்தியில் இருந்து பெரியபுலோ கிராமத்துக்கூடாக நெல்லியான் கிராமத்திற்குச் செல்லும் வீதி போக்குவரத்துச் செய்யமுடியாமல் மிகவும் அவலநிலையிலுள்ளன.




### கொழும்பு

புதன் 13 - 10 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைப்படஇசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழலிசை, 7-30 விரிவுரை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை.

### மகாத்மாகாந்தி ஜெயந்திவிழா

சாவகச்சேரி, செவ்.
''மகாத்மா காந்திக்கு விழாவெடுக்கும் இந்நாளில் அவரது புனிதமான வாழ்க்கையை மனதில்வைத்து அவர் காட்டிய பாதையில் நம்மத்தியிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து சமூக வாழ்வில் சமத்துவத்துடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.''

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தி ஜெயந்திதினவிழாவில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

திரு. பி. செல்வரத்தினம் இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார். பண்டிதர் எஸ். ஆசிநாதன், திரு. எம். மதிபாலசிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்.


**ஐந்தாம் வகுப்பு**
**மூன்றும் தவணை**

ஐந்தாம் வகுப்புமாணவர் தாம் படித்த பாடங்களைத் திருப்பிப் பயிற்சி செய்யவும், பரீட்சையில் வருவன போன்ற வினாக்களுக்கு விடையெழுதிப் பழகவும் ஏற்ற பயிற்சிப் புத்தகங்கள் தயாராக உள்ளன.

வினாப்பத்திரங்கள்
தமிழ் (பாஷை) சதம் 70
கணிதம் சதம் 70
சூழல் சதம் 70
ஆங்கிலம் சதம் 70

பாடத்திட்டம் முழுவதையும் வினா விடை உருவத்தில் அமைந்த
ஐந்தாந்தரச் சூழல்
(1100 வினாவிடை) ரூ. 1-80
ஐந்தாந்தர மொழி நூல்
(பயிற்சிக்குரிய) ரூ. 1-40

ஷெ நூல்களை எழுதியவர்:
வே. க. கந்தசாமி
(புதுமை லோலன்)

விற்பனையாளர்:
ஆனந்தா அச்சகம்
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


## வரி விளம்பரம்


**விற்பனைக்கு**
**வாடகைக்கு**
**கொமிஷனுக்கு**

ஹோட்டல், கபே முதலியவைகளுக்கேற்ற தற்கால நவீன தளபாடங்கள் (ஐஸ் பெட்டி, பான் 3, (இங்கிலிஷ் தயாரிப்பு), மாபிள் மேசை 20, உட்பட சகலதும் விற்பனைக்கிருக்கிறது. விரும்புவோருக்கு அதே தளபாடங்களுடன் மூன்று மாடிக்கட்டடம் வாடகைக்கோ அல்லது கொமிஷனுக்கோ ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். குடிவகைச் சாய்ப்புகளுக்கு மிகப்பொருத்தமான இடம், விபரங்களுக்கு: சிங்கப்பூர் கபே, 204, ஆஸ்பத்திரி றேட்' யாழ்ப்பாணம். 1126

EDUCATIONAL

Only a few vacancies exist inour G.C.E. Ordinary Level Arts / Science / Commerce Classes. Enrol without delay. United Institutes, Nelliady, Karaveddy / 107, Pointpedro road, Nallur, Jaffna. 1083

Applications accepted for admission to G.C.E. Advanced Level Arts / Science. United Institutes, Nelliady, Karaveddy / 107, Pointpedro road, Nallur, Jaffna. 1085

REGAL--JAFFNA
NOW SHOWING!
Tony yovng
IN
HE RIDES TALL

**தேவை**

பெண் விற்பனையாளர்கள் தேவை. சம்பளம் ரூபா. 10-00. T. விநாயகம் இன்டஸ்றீஸ், 89, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1135

**விற்பனைக்கு**

25 சிறீ 592-ம் இலக்கமுடைய டீசலில் இயங்கும் ஒரு டிருக்ரரும், 55 சிறீ 649-ம் இலக்கமுடைய மண்ணெண்ணெயில் இயங்கும் ஒரு டிருக்ரரும் ரில்லர்களுடன் நல்ல நிலையில் விற்பனைக்கு இருக்கின்றன. இவை பற்றிய முழுவிபரங்களுக்கும் திரு. K. V. நடராசா, 'பத்மவாசம்' மிருசுவில் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 1134

யாழ்ப்பாணம் ரெயில்வே ஸ்ரேஷன் சந்தியில் இரண்டு பக்கமும் றேட்டமைந்த முக்கால்பரப்பு விசாலமுள்ள மூலைக்காணி விற்பனைக்கு இருக்கிறது. கடைகள் கட்டுவதற்குப் பொருத்தமான இடம். மறுவிபரங்களுக்கு: 91, பிரதான தெரு, யாழ்ப்பாணம். 1121


### தண்ணீர் திட்டம்

ஊர்காவற்றுறை, செவ்.
ஊர்காவற்றுறையில் இரண்டாது தண்ணீர்த் திட்டத்தை அமுல்நடத்தும் பொருட்டுசுவிட்சர்லாந்திலிருந்து இலங்கைக்கு வந்த நிபுணருடன் தண்ணீர் விநியோக பொறியியல் நிபுணரும் ஊர்காவற்றுறைக்கு விஜயம்செய்து பார்வையிட்டார். இவர்களுடன் ஊர்காவற்றுறை எம். பி, யும் வந்திருந்தார்.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது !
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-00, 9-30 க்கும்
சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்
'' இன்பம் தேடுது இளம் மனசு ! - அதிலே
இருக்கும் வகைகள் பல தினுசு !
அன்பு நிறைந்ததும் பெண்ணிடத்தில் - என்ற
அறிவு விளக்குது இப்படத்தில்''



முத்துராமன் புதுமுகம் நளினி, அசோகன், நாகேஷ், ராமதாஸ், மனோரமா, சின்னப்ப தேவர்
நடித்த
**தெய்வத் திருமகள்**
15-ம் திகதி வெள்ளி முதல்
கெப்பிட்டல் - கொழும்பு - மொடர்ன் - பண்டாரவளை
முதலிய திரைகளில் காண்பிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "தமிழர்களை நான் இழிவு படுத்தவில்லை"

## பத்திரிகை செய்திக்கு சிறிமா மறுப்பு

கொழும்பு, திங்கள் தமிழர்கள் இந்த நாட்டுக்கு வெறும் அடிமைகளாக வந்தார்கள் எனத் தாம் மாத்தளையில் கூறியதாக இம்மாதம் 4-ந் திகதி ஆங்கிலப் பத்திரிகையொன்றில் வெளியான செய்தி தவறானது என்றும் திரிபுபடுத்தி வெளியிடப்பட்ட செய்தியென்றும் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

திருமதி. சிறிமா தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கைத் தமிழர்கள் பற்றி மாத்தளையில் நடைபெற்ற கூட்டத்தில் நான் ஒன்றும் குறிப்பிடவில்லை. பிரிட்டிஷாரால்குறைந்தசம்பளத்துக்குவேலை செய்வதற்காக இங்கு கொண்டுவரப்பட்டதென இந்தியர்கள்பற்றியே நான் குறிப்பிட்டேன். இவர்கள் ஓரளவு அடிமைகளாகவே பிரிட்டிஷாரால் கொண்டுவரப்பட்டார்கள் என்று கூறினது உண்மை. ஆனால் இந்திய தோட்டத் தொழிலாளர்கள் அடிமைகள் என நான் குறிப்பிடவில்லை.

தமிழர்களும் மற்ற இனத்தவர்களும் சிறுபான்மை மதத்தவர்களும் என்மீது பகைமை கொள்ளச் செய்யவே இவ்விதம் திரிபு படுத்தி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

'தேசிய பத்திரிகைகள்' எனக் கூறப்படும் நமது பிரபல செய்திப் பத்திரிகைகள் செய்திகளைத் திரிபுபடுத்துவதில் எவ்வித நுணுக்கத்தைப் பின்பற்றுகின்றன என்பதை பத்திரிகைக் கமிஷன் அறிக்கையை வாசிக்கும் எவரும் உணர்வார்கள்.



யாழ்ப்பாண திறந்தவெளியரங்கில் இன்று மாலை நடைபெற இருக்கும் பிரபல தென்னிந்திய நாட்டிய நடிகை சினிமா புகழ் குமாரி சச்சு, மாடி லெட்சுமி இவர்களது நாட்டியத்தில் ஓர் அழகான காட்சி.

# புதிய மாணவர் அவஸ்தை

பம்பலப்பிட்டி, செவ்

பல்கலைக்கழக அதிகாரிகள் எவ்வளவு எச்சரிக்கை செய்தபோதிலும் பல்கலைக் கழகத்தில் புதிதாக அனுமதிபெற்ற மாணவர்களுக்கு 'ராக்கிங்' தொல்லை குறைந்தபாடில்லை. பல்கலைக் கலைக்கழக விடுதிகள் மட்டிலும் இதுவரை நடைபெற்றுவந்த இந்தப் பொல்லாத 'சனியன்' இப்பொழுது புதிய மாணவர்கள் தங்கியிருக்கும் வெளியேயுள்ள குடியிருப்பு இடங்களுக்கும் பரவிவிட்டது. புதிதாகச் சேர்ந்த மாணவர்களில் அனேகர் வெளியிலேயேதங்கியிருக்கின்றனர்.

'ராக்கிங்' நடத்தியதற்காக 20 வைத்திய மாணவர்வர்கள் வகுப்புகளுக்குச் செல்லாது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

பழைய மாணவர்கள் கொடுக்கும் இத்தொந்தரவிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு புதிய மாணவர்கள் பெருமுயற்சிகள் எடுக்கின்றனர். சிலர் தங்கள் பெயரை எவருக்கும் சொல்லாதிருக்கின்றனர்.

# "பாகிஸ்தான் கடைசி சீட்டும் ஆடிவிட்டது"

நியுயோர்க், அக். 11

காஷ்மீர் விஷயமாக பாகிஸ்தான் கடைசிச் சீட்டையும் ஆடிவிட்டு இப்போது வெளியார் முயற்சியிலேயே அதிக நம்பிக்கை வைத்திருப்பதாகவும் திரு. பூட்டோ இவ்விஷயமாக நியுயோர்க்கில் பல முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

இந்தோ - பாக். யுத்தத்தில் பாகிஸ்தானுக்கு பெருமளவு ஆட்சேதமும், ஆயுதச் சேதமும், பணச்செலவும் ஏற்பட்டிருக்கிறதென்றும், நஷ்டம் குறித்து சரியான தகவல் பெற முடியவில்லை என்றும் மேலும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி அயூப்கான் அமெரிக்காவுக்குச் செல்லும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு வருவதாயும், ஆனால் திரு. ஜோன்ஸன் ஆஸ்பத்திரியிலிருப்பதால் இது தடைப்பட்டிருக்கிறதென்றும் தொடர்ந்து கூறப்பட்டது.


சித்தன்கேணி

ஸ்ரீ அம்பலவாண நாவல சுவாமிகள் ஞாபகார்த்த மண்டப நிதிக்காக

பிரபல தென்னிந்திய நாட்டிய நடிகை

சினிமா புகழ்

**குமாரி சச்சு, மாடி லெட்சுமி**

ஆகியோரின் நடனக்கச்சேரி

( பரதநாட்டியம் )

பிரபல நாட்டிய கலாநிதி

வழுவூர் இராமையாபிள்ளை அவர்களின் முன்னிலையில்

**13-10-65 புதன்கிழமை**

**இரவு 6-30 மணிக்கு**

யாழ்ப்பாண திறந்த வெளியரங்கில்

நடைபெறும்

"தேவதாஸ்" புகழ்

பின்னணி பாடகி கே. ராணி பின்னணி இசை அளிப்பார்

டிக்கற் விபரம்: அன்பளிப்பு ரூபா 25-00, 10-00

1-ம் வகுப்பு ரூபா 5-00, 2-ம் வகுப்பு ரூபா 2-00


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நான் பார்த்த . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற அடையாள அணிவகுப்பில் எதிரியை அடையாளம் கர்ட்டினேன்.

எதிரி கேள்வி கேட்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

எதிரி: அவ்வீட்டில் நான் வேலைக்காரனாக இருக்கும்போது என்னைத்தெரியாதா?

சாட்சி: தெரியாது.

எதிரி வேறு கேள்விகள் கேட்கவில்லை.

க. விநாயகமூர்த்தி சாட்சியமளித்தபோது கூறியதாவது:—

தேவராசன் வீட்டிற்கு எதிர்வீட்டில் நான் இருக்கிறேன். சம்பவம் நடந்த தினம் காலை 11-30 மணிக்கு "ஐயோ, ஐயோ" என்றசத்தம் கேட்டது. வேலைககாரப் பெண்சரோசா கையில்குழந்தையுடன் 'ஐயோ ஐயோ' எனறு குழறிக்கொண்டு ஓடிவந்தார். நான் சாப்பாட்டு அறைக்கதவால் வீட்டிற்குள் சென்றேன். காலஞ்சென்ற தமயந்தி நிலத்தில் கிடந்தார். இரத்தம் காயங்களிலிருந்து வடிந்துகொண்டிருந்தது. அங்கு நின்றவர்களின் உதவியுடன் அவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேன். அதன்பின் வேலைக்காரப்பையன் இராசையா வந்து ராஜலட்சுமி இரத்தக்காயங்களுடன் கிடப்பதாகக் கூறினர். சாப்பாட்டு அறை மூடியிருந்தது. அடுப்படிக்குச் செல்லும் வழியில் போய்ப்பார்த்தேன். தலையில் இரத்தக்காயங்களுடன் ராஜலட்சுமி விழுந்து டந்தார். அங்குள்ளவர்களின் உதவியுடன் அவரை ஆஸ்பத்திரிக்கு அனுபபினேன். பொலிஸாருக்கும்இதைஅறிவித்தேன்.

எதிரி: அங்குநான்வேலைக்காரனாக இருக்கும்போது என்னைத்தெரியாதா?

சாட்சி: தெரியாது.

த. சிவயோகாம்பிகை சாட்சியமளித்தபோது, சம்பவம் நடந்த தினம் நான் கடையிலிருந்தபோது 'ஐயோ ஐயோ' என்ற சத்தம் கேட்டதாகவும், சரோஜா வந்து இரத்தக் காயங்களுடன் அம்மா கிடப்பதாகக் கூறியதாகவும், விநாயகமூர்த்தியுடன் உள்ளே சென்றபோது தமயந்தி விழுந்து கிடந்ததாகவும் கூறினர்.

எதிரி: நான் அங்குவேலைக்காரனாக இருந்தபோது என்னைத்தெரியாதா?

சாட்சி: தெரியாது.

காளிமுத்து வெள்ளைச் சாரமும், வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தார். விசாரணையைப் பார்ப்பதற்கு பெண்களும் வந்திருந்தனர்.

இவ்வழக்கில் 65-ம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதி [illegible] கொலை செய்ததாகவும், திருமதி. தேவராசனை கொலைசெய்ய முயற்சித்ததாகவும், கதிரவேலு காளிமுத்து என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் எவரும் ஆஜராகவில்லை. ஆனைக்கோட்டைப்பொலிசார்வழக்கை நடத்தினர்.

மேல்விசாரணை இம்மாதம் 26-ம் திகதிவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

# மாத்தளை - யாழ்ப்பாணம் மாணவர் ஹாக்கி போட்டி

## 2 - 0 கோல்களால் மாத்தளை வெற்றி

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நேற்று மாலை நடைபெற்ற ஹாக்கிப் போட்டியில், யாழ்ப்பாணக் கோஷ்டி மாத்தளைக் கோஷ்டியிடம் தோல்வி கண்டபோதிலும், யாழ்ப்பாணக் கோஷ்டியினர் விட்டுக் கொடுக்காமல் விளையாடியதால் போட்டி ரசிக்கக் கூடியவிதத்தில் அமைந்திருந்தது.

இருபது வயதுக்குட்பட்ட மாத்தளை பாடசாலை மாணவர் தெரிவுக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் பாடசாலை மாணவர் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில்நடைபெற்ற ஆட்டத்தின் ஆரம்பமே விறுவிறுப்பாகக் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்து வீரர்கள் மாத்தளை வீரர்களைத் தோற்கடித்துவிடுவார்களோ என்று எண்ணுமளவுக்கு முன்னணி வீரர்கள் பந்தை மிகவும் அழகாக மாத்தளை கோல் நுழைவாசலுக்குக் கிட்டே கொண்டுபோயும், கடைசியில் 'கோட்டை' விட்டுவிட்டார்கள் இப்படிப் பல தடவைகளில் நடந்தது!

போட்டி ஆரம்பமாகிப் பதினைந்து நிமிடத்தின் பின்னர் மாத்தளை முன்னணி வீரர் சந்திரா விஜயகோன் கவர்ச்சிகரமான முறையில் பந்தை யாழ்ப்பாணம் கோலுக்குள் தள்ளினர். யாழ்ப்பாணக் கோல் காப்பு வீரர் பந்தை எப்படித்தான் பிடிக்க முயன்றும், 'கிழி'த்துக்கொண்டு போய்விட்டது பந்து!

பல தடவைகளில் மாத்தளை வீரர்கள் பந்தைக் கோலுக்குள் இறக்கச் சந்தர்ப்பம் கிடைத்தும் யாழ்ப்பாணக் கோல் காப்பு வீரரின்பலத்தபாதுகாப்பைவிலக்கி பந்தை உள்ளேசெலுத்த முடியாமல் போய்விட்டது. யாழ்ப்பாணக் கோல்காப்பு வீரர் மிகவும் திறமையாக விளையாடினர் என்றே சொல்லவேண்டும்.

யாழ்ப்பாண முன்னணி வீரர் ராஜா மிகவும் சுறுசுறுப்பாக எல்லாரையும் கவரக்கூடிய விதத்தில் விளையாடினர். பந்தை அவர் 'கட கட' வென்று கொண்டு போனதே தனி அழகு!

இடைவேளைக்குப் பின்னர் மாத்தளை வீரர் என். பி. துல்லாவா மிகவும் இலகுவாகப் பந்தைக் கொண்டு சென்று யாழ்ப்பாணக் கோலுக்குள் இறக்கினர். இவர் பந்தைக் கொண்டு போய் கோலுக்குள் தள்ளிய விதம் மெச்சத்தக்கதாய் இருந்தது.

இப்போட்டியில் யாழ்ப்பாணக் கோஷ்டியை 2—0 கோல்களால் மாத்தளைக் கோஷ்டியினர் ஜெயித்தனர். திருவாளர்கள் ராஜசிங்கம், அருணாசலம் ஆகியோர் இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தனர்.

பதினேழு வயதுக்குட்பட்டவர்களிடையேயான யாழ்ப்பாணம் பாடசாலை மாணவர் தெரிவுக் கோஷ்டிக்கும், மாத்தளைப் பாடசாலை தெரிவுக் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கோஷ்டியை 2—0 கோல்களால் மாத்தளைக் கோஷ்டி ஜெயித்தது.

இப்போட்டியில் மாத்தளை வீரர்களின் விளையாட்டு பாராட்டக்கூடிய விதத்தில் அமைந்திருந்தது.

இப்போட்டிக்கு அருளானந்தம், செல்வரத்தினம் ஆகியோர்கள் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

--'ஆல்ரவுண்டர்'

# அயூபுக்காக கொலை செய்தாராம்

புதுடில்லி, அக். 12

இங்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒரு பாகிஸ்தான் பிரஜை, சில அரசியல் கொலைகள் சம்பந்தமாக பாகிஸ்தான் பொலிஸார் தன்னைத் தேடிவருவதாக இந்தியப் பொலிஸாரிடம் கூறியதாகத் தெரிகிறது.


## தேவை

முள்ளியவளையில் எமது 'ஈழநாடு' பத்திரிகையை விற்பனை செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: மனேஜர், ஈழநாடு, லிமிட், யாழ்ப்பாணம். 1205


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org